செய்தி வெளியீடு எண்—314 நாள் – **28.4.2008**

**<u>சென்னை தரமணியில் 3000 கோடி ரூபாய் முதலீட்டில்</u>**
**<u>55 ஆயிரம் பேருக்கு வேலைவாய்ப்பு வழங்கும்</u>**
**<u>தகவல் தொழில் நுட்ப சிறப்புப் பொருளாதார மண்டலம்</u>**

# <u>முதலமைச்சர் கலைஞர் முன்னிலையில்</u>

## <u>டாட்டா ரியாலிட்டி மற்றும் இன்ஃப்ராஸ்டிரக்சர் லிமிடெட் இந்தியன் ஓட்டல்ஸ் கம்பெனி லிமிடெட் நிறுவனங்களுடன் டிட்கோ நிறுவனம் ஒப்பந்தம்</u>

**சென்னையின் தகவல் தொழில்நுட்ப மையமாகத் திகழும் ராஜீவ்காந்தி சாலையில் (பழைய மாமல்லபுரம் சாலை) அமைந்துள்ள தரமணியில் 25.27 ஏக்கர் பரப்பளவில், தமிழ்நாடு தொழில் வளர்ச்சி நிறுவனம் (டிட்கோ) டாட்டா ரியாலிட்டி மற்றும் இன்ஃப்ராஸ்டிரக்சர் லிமிடெட் (டி.ஆர்.ஐ.எல்.), இந்தியன் ஓட்டல்ஸ் கம்பெனி லிமிடெட் ஆகிய நிறுவனங்களுடன் இணைந்து கூட்டுத் துறையில் 3000 கோடி ரூபாய் முதலீட்டில் உலகத் தரம்வாய்ந்த தகவல் தொழில்நுட்ப சிறப்புப் பொருளாதார மண்டலம் ஒன்றினை உருவாக்குகிறது.**

**இத்திட்டத்தை நிறைவேற்றுவதற்காக மாண்புமிகு தமிழக முதலமைச்சர் கலைஞர் அவர்கள் முன்னிலையில், இன்று (28.4.2008) நடைபெற்ற கூட்டுத்துறை ஒப்பந்தத்தில் தமிழக அரசு சார்பில் டிட்கோ நிறுவனத்தின் தலைவர் மற்றும் மேலாண்மை இயக்குநர் திரு. எஸ். இராமசுந்தரம் இ.ஆ.ப., டாடா சன்ஸ் நிறுவனத்தால் புதிதாக உருவாக்கப்பட்ட டாட்டா ரியாலிட்டி மற்றும் இன்ஃப்ராஸ்டிரக்சர் நிறுவனத்தின் தலைவர் மற்றும் இந்தியன் ஓட்டல்ஸ் கம்பெனி நிறுவனத்தின் துணைத் தலைவர் திரு.ஆர்.கே. கிருஷ்ணகுமார் ஆகியோர் கையெழுத்திட்டனர்.**

**3000 கோடி ரூபாய் முதலீட்டில் அமையவுள்ள இந்தப் புதிய தகவல் தொழில் நுட்ப சிறப்புப் பொருளாதார மண்டலத்தில் ஒருங்கிணைந்த பன்னாட்டு மாநாட்டு மையமும், ஐந்து நட்சத்திர தங்கும் விடுதியும், அடுக்குமாடி குடியிருப்புகளும் அமைக்கப்படும். மொத்தம் 40 இலட்சம் சதுர அடி பரப்பளவில் அமையும் இத்திட்டத்தின் முதல் கட்ட கட்டுமானப் பணிகள் 20 இலட்சத்து 30 ஆயிரம் சதுர அடி பரப்பில் நிறைவேற்றப்பட்டு 2009 ஆம் ஆண்டில் செயல்படத் தொடங்கும். அதனைத் தொடர்ந்து**

**19 இலட்சத்து 70 ஆயிரம் சதுர அடி பரப்பளவுக்கு இரண்டாம் கட்ட கட்டுமானப் பணிகள் 2011–இல் நிறைவுபெறும். இந்தத் தகவல் தொழில்நுட்பச் சிறப்புப் பொருளாதார மண்டலம் 40 ஆயிரம் பேருக்கு நேரடி வேலைவாய்ப்புகளையும், 15 ஆயிரம் பேருக்கு மறைமுக வேலைவாய்ப்புகளையும் உருவாக்கும்.**

**இந்நிகழ்வின்போது, தலைமைச் செயலாளர் திரு. எல். கே. திரிபாதி, இ.ஆ.ப., தொழில் துறைச் செயலாளர் திரு.எம்.எப். பரூக்கி, இ.ஆ.ப., டாட்டா ரியாலிட்டி மற்றும் இன்ஃப்ராஸ்டிரக்சர் லிமிடெட் நிறுவனத்தின் செயல் இயக்குநர் திரு. பிலி கர்க்காரியா, முதன்மை நிதி அலுவலர் திரு. கிஷோர் சாலட்டோர், இந்தியன் ஒட்டல்ஸ் நிறுவனத் துணைத் தலைவர், திரு. சுமித் குஹா, செயலர் திரு. சங்கர் பரமேஸ்வரன் ஆகியோர் உடனிருந்தனர்.**

***

**வெளியீடு– இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, சென்னை–9.**